பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

ஏடு: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 27 புதன்கிழமை (11-08-1993) UTHAYAN—A Lively National Tamil Daily இதழ் 256

மண்கிண்டிமலைத் தாக்குதலினால் சீற்றம்!

# படை தளபதிகள் மீது ஜனாதிபதி பாய்ச்சல்!

## கடமையைச் செய்யத் தவறினால் கடும் விளைவு என எச்சரிக்கை

கொழும்பு, ஆகஸ்ட் 11

ஒழுங்காகக் கடமைகளைச் செய்யுங்கள் அல்லது விளைவுகளை எதிர் நோக்குங்கள். — இவ்வாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ஆயுதப்படைகளின் தளபதிகளையும் கடுமையாக எச்சரித்திருக்கிறார்.

மண்கிண்டிமலை (ஜனகபுர) தாக்குதல் சம்பவம் தொடர்பாக படை அதிகாரிகள் மீது அதிருப்தியுற்றிருக்கும் ஜனாதிபதி, கடும் சீற்றம் வெளிப்பட இவ்வாறு எச்சரித்ததாக உயர் நிலை பாதுகாப்பு வட்டாரம் ஒன்றை மேற்கோள் காட்டி "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

மண்கிண்டிமலை (ஜனகபுர) இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்த சம்பவத்தைத் தொடர்ந்து ஆயுதப்படைகளின் தளபதிகளுடன் ஜனாதிபதி பேச்சுகள் நடத்தினார். ஒன்றரை மணித்தியாலங்கள் வரை அப்பேச்சு நடந்தது.

"பகலில் செயல்பட்டு, இரவில் தூங்கும் நடைமுறைக்குப் பதிலாக, படையினர் இனி மேல் பகலில் தூங்கி இரவில் செயல்படட்டும்"— என்றும்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## துருப்புகளை நகர்த்துவதில் ராணுவ தளபதிக்கு பங்கில்லை

### ஜனாதிபதியிடம் கவலை தெரிவிக்கிறார் சிசில்

கொழும்பு, ஆக. 10

போர் உத்திகளை வகுப்பதிலோ அல்லது துருப்புகளை நகர்த்துவதிலோ எனக்கு ஒரு பங்கும் இல்லை. இவை எல்லாவற்றிலும் கூட்டு நடவடிக்கைக் கட்டளைப் பீடத்தின் சொல் தான் செல்லுபடியாகும்.

— இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்னா முன்கண்டவாறு தெரிவித்தார்.

மண்கிண்டிமலை இராணுவ முகாம் வீழ்ச்சியின் பின்னர் ஆயுத படைகளின் தலைவர்களை ஜனாதிபதி சந்தித்த போது, முன்கண்ட கருத்தை சிசில் வைத்தியரத்னா வெளியிட்டார்.

இராணுவ நடவடிக்கைகளில் அல்லது பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளில் ஏற்படும் தோல்விகளுக்கு இராணுவத்தின் மீது பொறுப்பு சுமத்தப்படுகின்றது; வெற்றி ஏற்படும் போது அதற்கான பெருமையை கூட்டு நடவடிக்கை கட்டளைப் பீடம் தட்டிச் செல்கின்றது என்றும் அவர் கூறினார்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

மண்கிண்டிமலைத் தாக்குதலின்

## புலிகளிடம் இழந்த ஆயுதங்கள்; ஈடுசெய்ய புதிதாகத் தருவிப்பு

### உயர் மட்டக்குழு சீனாவுக்கு விஜயம்

கொழும்பு, ஆக. 11

மண்கிண்டிமலை இராணுவ முகாமில் இருந்து விடுதலைப் புலிகளிடம் பறிகொடுத்த ஆயுத தளபாடங்களின் இழப்பை ஈடுசெய்வதற்காக—

இவ்வருட இறுதியில் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டிருந்த ஆயுதங்களைக் குறிப்பிட்ட காலத்திற்கு முன் இங்கு கொண்டுவருவதற்கு பாதுகாப்பு அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக சீனா சென்று பேச்சுவார்த்தை நடத்த உயர்மட்ட குழு ஒன்று இம்மாத இறுதிக்குள் புறப்பட இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக எயார் வைஸ் மார்ஷல் வோல்டர் பெர்னான்டோ நியமிக்கப்பட்டு மூன்று மாத காலம் முடிவடையும் முன்னர் மண்கிண்டிமலை இராணுவமுகாம் தாக்குதல் நடந்தது அவருக்கு

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியை கொல்ல சதி! முக்கிய நபர்கள் கைதாம்

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவைக் கொலை செய்யும் சதித் திட்டம் ஒன்று அம்பலத்துக்கு வந்திருப்பதாகவும் —

அதனையடுத்து ஜனாதிபதியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவில் மேலதிக கொமாண்டோக்கள் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

ஜனாதிபதியைக் கொலை செய்யும் சதித் திட்டம் தொடர்பாக முக்கிய நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும்—

அவர்களில் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் கொலை செய்யும் கூலிப்படையைச் சேர்ந்தவர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-6)

## வடபகுதி யுத்த முனையில் புலிகளின் கை ஓங்கியுள்ளது

### படை உயரதிகாரிகள் ஒப்புக் கொள்கின்றனர்

கொழும்பு, ஆக. 11

வடபகுதி யுத்த முனையில் விடுதலைப் புலிகளின் கை ஓங்கியுள்ளது.

பாதுகாப்புப் படைகளின் உயர் அதிகாரிகள் இவ்வாறு உத்தியோகப்பற்றற்ற முறையில் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டுள்ளது.

அப்பத்திரிகையில் ஷமிந்திரா பெர்டினன்டோ எழுதிய விமர்சனக் கட்டுரை ஒன்றில்—

"கொப்பேகடுவ மற்றும் படைத்தளபதிகளின் மரணத்தின் பின்னர், இராணுவத்துக்கு பேரழிவு ஏற்படுத்திய தாக்குதல்களை நடத்தியதன் மூலம் வடபகுதிப் போர்முனையில் விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமது நிலையை மீண்டும் பலப்படுத்தியுள்ளார்" — என்று தெரிவித்துள்ளார்.

"கூட்டுப்படைகளின் இராணுவ நடவடிக்கை மூலம் வடக்கை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் இராணுவத்தின் திட்டத்துக்கு கொப்பேகடுவ — விமலரத்னா ஆகியோரின் படுகொலை முற்றுப் புள்ளி வைத்தது இவர்களின் மரணங்கள் போன்ற வேறெந்தச் சம்பவமும் யுத்த

[2 ஆம் பக்கம் பார்க்க]

## 3 வருட யுத்தத்தில் 5,000 படையினர் பலி

### "விடுதலைப் புலிகள்" தகவல்

யாழ்ப்பாணம், ஆக. 11

மூன்று வருடங்களாக நடைபெற்று வரும் 2 ஆவது ஈழப் போரில் ஸ்ரீலங்கா அரசு பல படைத் தளபதிகளையும், அரசியல் தலைவர்களையும், சுமார் 5 ஆயிரம் படையினரையும் இழந்துள்ளது.

அத்துடன் கடந்த 3 ஆண்டுப் போரில் 8 ஆயிரத்து 500 க்கும் அதிகமான படையினர் காயம் அடைந்துள்ளனர்.

இவர்களில் பலர் மீண்டும் போர்க்களம் செல்ல முடியாத நிலைமையை காரணம் காட்டி நிரந்தரமாக படைகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அத்துடன் பயத்தின் காரண

(2 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசு மீது கண்டனம்

### ஏற்றுக் கொண்ட சிபாரிசுகளை அமுல் நடத்தவில்லை

கொழும்பு, ஆக. 11

மனிதஉரிமை மீறலைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை சமர்ப்பித்த 32 சிபார்சுகளில் பெரும்பாலானவற்றை இலங்கை அரசு செயல்படுத்தவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையே இவ்வாறு குற்றஞ் சாட்டியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பிரிவுத் தலைவர் எலிஸபெத் நிஸான் லண்டனில் வைத்து சண்டே ரைம்ஸுக்கு அளித்த பேட்டியில்—

"சபையின் 32 சிபார்சுகளில் முப்பதை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டது. [illegible] ஒரு சிலவற்றையே அரசு பூரணமாக அமுல்நடத்தியது"— என்று சொன்னார்.

மனித உரிமைகளை மதிக்க வேண்டிய தார்மீக, சட்டக் கடப்பாடு இலங்கைக்கு

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளின் கடிதங்களுடன் அரச அதிபர் இன்று பயணம்!

யாழ்ப்பாணம், ஆக. 11

உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் யுத்தக் கைதிகளை யாழ். அரச அதிபர் நேற்று மாலை சந்தித்தார்.

அவரிடம் ஸ்ரீலங்கா ஜனாதிபதி, கூட்டுப்படை தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வோல்டர் பெர்னாண்டோ பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா ஆகியோருக்கு யுத்தக் கைதிகளால் எழுதப்பட்ட கடிதங்கள் கையளிக்கப்பட்டன.

அவர்களின் கடிதங்களுடன் அரச அதிபர் இன்று கொழும்பு செல்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

யுத்தக் கைதிகள் நேற்று 13 ஆவது நாளாக தொடர்ந்தும் உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். (த-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

கந்தரோடை ஐங்கரன் சிறுவர் மாதிரி பாடசாலையின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழும்பு பரிசு பெறும் இலக்கங்கள்.

1 ஆம் பரிசு — 4718
2 ஆம் பரிசு — 724
3 ஆம் பரிசு — 4253
4 ஆம் பரிசு — 1291
5 ஆம் பரிசு — 3826
6 ஆம் பரிசு — 379
7 ஆம் பரிசு — 083
8 ஆம் பரிசு — 1226

மேற்படி பரிசுக்குரியவர்கள் 20 ஆம் திகதிக்கு முன் பாடசாலை நேரத்தில் பரிசுகளை பெற்றுக் கொள்ளவும். இத் திகதிக்குப் பின் பரிசுகள் பாடசாலைக்குச் சொந்தமாகும்.

(6618)

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 03 — 10 — 1933

மறைவு: 26 — 07 — 1989

அமரர்

## ஸ்ரீ குமாரசாமி துரைராஜா

திதி: 11 — 08 — 1993

விதி வரைந்த சித்திரத்தால் விலக்கப்பட்டீர்களே ஐயா!
எவருக்கும் கிடைக்காத தந்தையாய்
ஏழேழு ஜென்மத்திலும் எட்டாதவராய்
எங்கள் மீது பாசமழை பொழிந்தீரே!
நீங்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் நான்கு சென்றாலும் - உங்கள்
நினைவலைகள் எங்கள் இதயத் தடாகத்தில்
அன்றலர்ந்த மலர்போல் பூத்திருக்கும்.

தங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி, மக்கள், சகோதரர்.

44, ரயில் றோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(26897)

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



உதயத்தில்:
15 — 04 — 1970

மத்தியின் இதயத்தில்
11 — 08 — 1990

## கிருஷ்ணபிள்ளை சதீஸ்கரந்தன்

(சிரேஷ்ட மாணவ தலைவர் - 1989)

பகலவன் மறைவுக்குப்பின் பால்நிலவு அதன் பணி தொடரும்
வாழ்ந்துபட்ட எம்மரமும் விதைபொன்றில் உயிராகும்
மலர்கள் உதிர்ந்தபின்னும் நாரோடு மணமுறையும்
உயிருறையும், உடல் மறையும்
உம் சாதனைகள் எம்முடனே!

மாணவ முதல்வர்கள் அவை,
யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி.

(26900)

## சர்வதேச மன்னிப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்டு என்று தெரிவித்த திருமதி நிஸான் சிவில் யுத்தம் நடக்கும் காலத்தில் கூட மக்களின் அடிப்படை உரிமைகளை மீற அவசரகாலச் சட்ட விதிகளை பயன்படுத்த முடியாது என்றும் தெரிவித்தார்.

## 3 வருட யுத்தத்தில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாக 8 ஆயிரத்துக்கும் கூடுதலானோர் படையில் இருந்து தப்பி ஓடியுள்ளனர்.

இவ்வாறு கடந்த 3 ஆண்டுகளில் ஸ்ரீலங்கா படை 18 ஆயிரம் பேரை இழந்துள்ளது.

ஆட்கள், மற்றும் ஆயுத இழப்பு ஸ்ரீலங்கா படைபலத்தில் 20 வீதமான இழப்பை ஏற்படுத்தியுள்ளது.

— விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான "விடுதலைப் புலிகள்" ஆடி மாத இதழில் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## புலிகளிடம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனவேதனையை கொடுத்திருப்பதாகவும்—

எனினும் இனப்பிரச்சினைக்கான தீர்வில் பேச்சுவார்த்தைக்குப் பதிலாக, இராணுவத்தைப் பலப்படுத்தி, யுத்தமயப்படுத்துவதிலேயே அரசின் கவனம் திரும்பி இருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுவதாகவும் அந்தப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5-9)

## துருப்புகளை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனகபுர இராணுவ முகாம் வீழ்ச்சிக்கு சில வாரங்கள் முன்பதாக விடுதலைப் புலிகளின் உளவாளிகள் அங்காடி வியாபாரிகள் போன்று முகாமுக்குச் சென்று வந்துள்ளனர் என்றும் —

அதனால் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய தினம் முகாமுக்குள் நுழைந்ததும் நேராக தகவல் தொடர்பு சாதன அறைக்கு அவர்களால் செல்ல முடிந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

மூன்று மாதங்களுக்கு முன்னரே இத்தாக்குதலுக்காக விடுதலைப் புலிகள் ஐந்நூறு பேர் வரையில் தயாராகி வருவதாக புலனாய்வு அறிக்கைகள் தெரிவித்திருந்தன என்றும் அச்சந்திப்பின் போது தெரிவிக்கப்பட்டது.

சந்திப்பின் போது சூடான வார்த்தை பரிமாற்றம் இடம்பெற்றது. அந்தக் கட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளராகத் தாம் இருந்த சமயம் "சண்டையிடும் முழுக்களின் உத்தி" என்ற தலைப்பில் தாம் தயாரித்த திட்டம் பற்றி, தேசிய பந்தோபஸ்து ஆலோசகர் ஜெனரல் சேபால ஆட்டிகல கூட்டத்தில் நினைவுபடுத்தினார்.

இத்திட்டம் பூரணமாக அமுல் நடத்தப் படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஆட்டிகல அறிக்கையை அக்கறையுடன் வாசித்து, அதனை அமுல் செய்ய முயற்சிக்கும்படி இராணுவத் தளபதியை ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

மரபு வழி யுத்தத்தில் ஈடுபடுவதிலும் பார்க்க கெரில்லா இயக்கத்துக்கு எதிரான நடவடிக்கையில்கூடுதலாக விசேட அதிரடிப்படை கொமாண்டோக்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்று ஆட்டிகல அறிக்கையில் [illegible] டுள்ளது. (உ-ள)

## வல்வெட்டித்துறை இளைஞர்கள் கைது

கப்பல்களில் வேலை பெற்றுக் கொள்வதற்காக இரண்டு மாத காலமாக கொட்டாஞ்சேனை விடுதி ஒன்றில் தங்கியிருந்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஏழு வாலிபர்கள் பொலீஸரால் கைது செய்யப்பட்டு, பேலியகொடை பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (இ-173)

## வடபகுதி யுத்த...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உத்திகளை இவ்வளவு மோசமாகப் பாதித்தது இல்லை என்று பாதுகாப்பு வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

"ஆராவி கண்ணிவெடித் தாக்குதலின் பின்னர் கூட்டுப் படையின் பாரிய இராணுவ நடவடிக்கை எதுவும் வடபகுதியில் இடம்பெறவில்லை.

"கொப்பேகடுவ மரணத்தின் பின்னர் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 560 படையினர் கொல்லப் பட்டுள்ளனர்.

"கடந்த 10 ஆண்டுகளில் அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் சண்டையிடும் படையினருக்கு உதவ ஒன்றுமே செய்யவில்லை.

"எனினும் கடந்த 4, 5 வருடங்கள் மிக மோசமானதாக இருந்தது. அரசியல் நோக்கங்கொண்ட முடிவுகள், அரச விழாக்கள் மற்றும் தோல்வியில் முடிவடைந்த நடவடிக்கைகள் எல்லாம் விடுதலைப் புலிகளுக்கு பெரிய அளவில் உதவி புரிந்துள்ளன.

"1991 ஜூலை ஆனையிறவுப் போரில் பெரும் பின்னடைவைச் சந்தித்த விடுதலைப் புலிகள் தற்போது குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளனர்.

"கடந்த 12 மாதங்களில் படையினருக்கு எதிராக அதிர்ச்சி தரும் தாக்குதல்களை நடத்தி உள்ளனர்."

— இவ்வாறு அந்தக் கட்டுரையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (உ-ள)

## படை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஜனாதிபதி தளபதிகளிடம் தெரிவித்தார்.

ஆயுதப்படைகளின் பிரதம தளகர்த்தரும் பாதுகாப்பு அமைச்சருமான ஜனாதிபதி விஜேதுங்கா, பாதுகாப்புப் படையினர் முழு அளவில் தாக்குதல்களை நடத்தும்படி உத்தரவிட்டார்.

ஜனகபுர இராணுவ முகாம் அவசரப் போக்கில் அமைக்கப் பட்டது என்றும் —

அதன் வெளிப்பாதுகாப்பு அரண்கள் முறையாக அமைக்கப்படவில்லை என்றும் கூட்டுப்படைகள் தளகர்த்தர் ஹமில்டன் வனசிங்கா அச்சந்திப்பின்போது ஏற்றுக்கொண்டார்.

படையினர் மத்தியில் சண்டையிடவேண்டும் என்ற திடசித்தம், இலட்சியம் ஆகியவை இல்லாமைதான் ஜனகபுர இராணுவ முகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்ததற்கான முக்கிய காரணமாகும் என்றும் அச்சந்திப்பின் போது தெரிவிக்கப்பட்டது.

யுத்தம் ஒன்றை நடத்தும் போது இப்படிப்பட்ட பின்னடைவுகள் ஏற்படுவது உண்டு என [illegible] உயர் தலைவர் [illegible] தெரிவித்தார்.

## இளாலி கடற் சம்பவம்:

# கைதான ஒன்பது பேரில் மூவர் மட்டுமே பலாலியில்!

யாழ்ப்பாணம், ஆக. 11

இளாலிக் கடற்பரப்பில் கடந்த மாதம் 29 ஆம் திகதி கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலின்போது படையினரிடம் சிக்கியவர்களில் மூன்று பேர் மட்டுமே பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தற்போது தெரியவந்துள்ளது.

நாகன் நல்லையா (45 வயது) — அச்சுவேலி, மயில்வாகனம் பரமேஸ்வரன் (24 வயது) — தெல்லிப்பழை, ராசமு சிவஞானசுந்தரம் (60 வயது) — தும்பளை ஆகியோரே பலாலியில் உள்ளதாகவும்—

மாப்பாணர் செல்வவிநாயகம் (47 வயது) — புலோலி செல்வரத்தினம் தயானந்தன் (52 வயது) — தும்பளை ஆகியோர் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதாகவும் தற்சமயம் தெரிய வந்துள்ளது.

படகோட்டிகளான சந்திரயாப்பிள்ளை சௌந்தரநாதன் [26 வயது] — மண்டைதீவு, மடு அகதி முகாமில் தங்கியிருந்தவர்களான செல்லத்தம்பி நேசன் [20 வயது], ஆரோக்கியநாதர் இன்பம் (20 வயது), சிறில் சூரி (25 வயது) ஆகியோர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும்—

அவர்கள் எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறித்து தகவல் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# ஈழத் தமிழ் அகதிகளை மீளஅனுப்புவதைநிறுத்துக!

## "ஏசியா வாச்" கோரிக்கை

ஈழத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதைநிறுத்துமாறு "ஏசியா வாச்" என்ற அமெரிக்க மனித உரிமை இயக்கம் இந்தியாவைக் கேட்டுள்ளது.

வட பகுதியில் போர் சூழ்நிலை நீடிக்கிறது. எனவே திருப்பி அனுப்பப்படும் அகதிகளை அவர்களது சொந்தக் கிராமங்களில் மீளக் குடியமர்த்துவது இயலாத காரியம். ஆகையால் அவர்களைப் பலவந்தமாக திருப்பி அனுப்ப வேண்டாம் என்று "ஏசியா வாச்" இந்திய அரசிடம் கேட்டுள்ளது.

நாளை 12 ஆம் திகதி தொடக்கம் "நிக்கோபர்" என்ற கப்பல் மூலம் ஈழத் தமிழ் அகதிகளை திருகோணமலைக்கு அனுப்புவதற்கு இந்திய அரசு ஏற்பாடு செய்திருப்பது தெரிந்ததே. (அ-6)

# மத்தியஸ்த யோசனை சமர்ப்பித்த குழு ஐ. நா. செயலாளரையும் சந்தித்தது

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஐ. நா. சபையின் மத்தியஸ்தத்தை கோருமாறு யோசனை சமர்ப்பித்த உலகளாவிய ஒத்துழைப்புக்கான உலகச் சபையின் தலைவரும், செயலாளரும், ஐ.நா.வின் செயலாளர் நாயகம் திரு. பூட்ரஸ் பூட்ரஸ் காலியை அண்மையில் சந்தித்துப் பேசியிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான யோசனையில் கையெழுத்திட்ட நால்வரில் உலகச் சபையின் தலைவரான திருமதி மெய்ரீட் கொரிகன் மகுரேயும் ஒருவராவார். இவர் பெல்பாஸ்டில் கத்தோலிக்கர்களுக்கும் புரொட்டஸ்தாந்தர்களுக்கும் இடையில் நடைபெற்ற சண்டையை முடிவுக்குக் கொண்டு வந்ததற்காக நோபல் பரிசு பெற்றவர்.

இதே வேளை பிரஸ்தாப அமைப்பின் செயலாளரான ஜேம்ஸ் நிக்கலஸ் இலங்கைத் தமிழராவார். இப்போது கனேடிய பிரஜை. ஒன்ராறியோவில் ஒரு கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிகிறார். (அ-ஏ)

## பாதயாத்திரையில் 300 பேர்

சாவகச்சேரி வாரிவனேஸ்வர சிவன் கோயிலில் இருந்து நல்லூர்க் கோயிலுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பாதயாத்திரையில் 300 க்கு மேலானோர் கலந்து கொண்டனர். (க-30)

SHAMROCK
யாழ். கண்டுக்குளி.

A/L 94, 95

பொருளியல் — திரு. E. பிரபாகரன்
கணக்கியல் — திரு. சௌந்தி
வர்த்தகம் — திரு. பசில்
அளவையியல் — திரு. யுகபாலசிங்கம்
கிறீஸ்தவம் — திருமதி A. மல்லிகா
இந்துநாகரிகம் — திரு. தாஸ்

(ஆரம்பம் — 94 மீட்டல் வினா - விடை)

தமிழ் — பிரபல ஆசிரியர்

(26899)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் மீளக் குடியேற்றம் கடைசி நேரத்தில் நிறுத்தம்

## அம்பாறையில் 330 தமிழ் குடும்பங்கள் அவதி

அம்பாறை, ஆக. 11

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்கள் காரணமாக கண்ணகிபுரம் என்னும் கிராமத்தில் இருந்து முற்றாக வெளியேறி தற்போது பனங்காடு அகதிமுகாமில் பல இன்னல்கள் மத்தியில் தங்கி உள்ள 330 தமிழ் குடும்பங்களை மீண்டும் கண்ணகிபுரத்தில் குடியமர்த்தும் வேலைகள் திடீரென இடை நிறுத்தப்பட்டுள்ளன.

கடந்த 39 மாதங்களாக இந்த அகதிகள் பனங்காடு அகதி முகாமில் தங்கி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை மீளக்குடியேற்றுவது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வெற்றி அளிக்காததை அடுத்து அகதிகள் புனர்வாழ்வு அமைச்சர் பி தயாரத்தினாவின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டுவரப்பட்டது.

அமைச்சர் தயாரத்தின எடுத்துக் கொண்ட நடவடிக்கையை அடுத்து முதல்கட்டமாக 179 குடும்பங்களை கடந்த மாதம் 31 ஆம் திகதி கண்ணகிபுரத்தில் மீளக்குடியமர்த்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

கண்ணகிபுர மக்கள் மீளக் குடியேறுவதற்கு உதவுவதாக ஜேர்மன் அரசு வாக்களித்ததை அடுத்து இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் கலாநிதி குளோஸ், அதிகாரிகள் சகிதம் சமீபத்தில் கண்ணகிபுரத்துக்கு விஜயம் செய்திருந்தார்.

ஆனால் அகதிகளை மீளக் குடியமர்த்தும் வேலைகள் நிறுத்தப்பட்டிருப்பதாக கடைசி நேரத்தில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# கிழிந்த நோட்டுக்கள் பெருமளவு தேக்கம்

யாழ்ப்பாணம், ஆக. 11

இலங்கை வங்கியின் யாழ்ப்பாணப் பிரதான கிளையில் கிழிந்த நோட்டுக்கள் பெரும் அளவில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றை 'குமாரி' கப்பலில் இங்கிருந்து கொழும்புக்கு அனுப்பி வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று இலங்கை வங்கியின் யாழ். பிரதான கிளையின் உயரதிகாரி தெரிவித்தார்.

கிழிந்த நோட்டுக்களை அனுப்புவதற்கு தற்போது கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதி தேவைப்படுவதாகவும், இதுவரை கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதி இன்றியே கிழிந்த நோட்டுக்கள் அனுப்பி வைக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-17)

# குடிதண்ணீர் வசதி இன்றி புங்குடுதீவு மக்கள் அவதி

யாழ்ப்பாணம், ஆக. 11

புங்குடுதீவுப் பகுதியில் தற்போது குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பகுதிக்கு முன்னர் பவுசர் மூலம் வேலணைப் பகுதியில் இருந்து குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது இந்த பவுசருக்கு தேவையான எரிபொருளை வழங்குவதற்கு படையினர் அதிக அக்கறை காட்டுவதில்லை என்று கூறப்படுகிறது.

அத்துடன் இப் பகுதியில் மருத்துவ வசதிகளும் போக்குவரத்து வசதிகளும் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-152)

# கூட்டுறவுப் பயிற்சியை முடித்து வெளியேறினர்

யாழ்ப்பாணம், ஆக. 11

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையால் நடத்தப்படும் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின் முகாமைத்துவம் தொடர்பான உயர்தர தேசிய சான்றிதழ் பயிற்சியை முடித்துக் கொண்டு நாற்பது பேரும் —

கூட்டுறவு பணியாளர் தராதரப் பத்திர சாதாரண பிரிவுக்கான பயிற்சியை முடித்துக் கொண்டு முப்பத்தைந்து பேரும் — இவ்வாண்டு முதல் கட்டமாக வெளியேறுகின்றனர்.

இரண்டாம் கட்ட பயிற்சிகளுக்கு மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்களும் தற்போது கோரப்பட்டுள்ளன.

மேற்படி இரண்டு கூட்டுறவு பயிற்சி நெறிகளையும் முடித்துக் கொண்டு வெளியேறுபவர்களுக்கான பிரியாவிடை வைபவங்கள் சென்ற 2ஆம், 9ஆம் திகதிகளில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெற்றன.

வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் இவர்களுக்கான பரீட்சையை நடத்தி சான்றிதழ்களை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது (இ-162)

# பாடசாலைகளுக்கு தளபாடம் விநியோகம்

உடுவில், ஆக. 11

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தில் உள்ள வட்டுக்கோட்டை, இளவாலை, பண்டத்தரிப்பு, சுழிபுரம் ஆகிய கொத்தணிகளில் தளபாடங்கள் பற்றாக்குறையாக உள்ள பாடசாலைகளுக்கு பண்டத்தரிப்புக் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளரினால் தளபாடங்கள் பங்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்துக்கு எடுத்துவரப்பட்ட தளபாடத் தொகுதியில் இருந்து கோட்டவாரியாக தளபாடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டன.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்திற்கு பாலர்வகுப்புகளுக்குரிய 397 பாலர் மேசைகளும், 322 பாலர் கதிரைகளும் மேல் வகுப்புகளுக்குரிய 183 மேசைகளும், 253 கதிரைகளும் கிடைத்துள்ளன. (இ-152)

# நில அளவையாளர்களை பதிவு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 11

யாழ். குடாநாட்டில் உள்ள அனுமதி பெற்ற நிலஅளவையாளர்கள் சகலரும் நாளை 12ஆம் திகதிக்கும் 16ஆம் திகதிக்கும் இடையில் காலை 9-00 மணி முதல் 11-00 மணி வரையில் கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்ட அரசியல் செயலகத்துக்கு நேரில் சமூகம் அளிக்கும்படியும்—

அங்கு வழங்கப்படும் படிவத்தைப் பூரணப்படுத்தி தவறாது தம்மைப் பதிவுசெய்து கொள்ளவேண்டும் என்றும்—

தமிழீழ விடுதலைப் புலிகளின் நில அளவைப் பிரிவினர் கோரியுள்ளனர்.

# பூந்தமல்லி சிறையை தகர்க்க பயமுறுத்தல்

சென்னை, ஆக. 11

ராஜீவ்காந்தி கொலைச் சந்தேக நபர்கள் வைக்கப்பட்டிருக்கும் பூந்தமல்லி சிறைக் கூடத்தை வெடி வைத்துத் தகர்க்கப் போவதாக தொலைபேசியில் அனாமதேய நபர் ஒருவரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்து பூந்தமல்லி சிறைக் கூடத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளன.

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட 26 பேரும் பூந்தமல்லி சிறைக்கூடத்தில் வைக்கப்பட்டிருப்பதும்—

பாதுகாப்புக் காரணமாக சிறைச்சாலை உள்ள வளாகத்திலேயே இந்தக் கொலை வழக்கு விசாரணை நடைபெறுவதும் —தெரிந்தவையே.

பூந்தமல்லி சிறைக் கூடத்தைத் தகர்ப்பதற்காக 20 பேர் அடங்கிய போராளிகள் குழு ஒன்று தமிழ் நாட்டுக்குள் நுழைந்து விட்டதாகவும் தொலைபேசியில் பேசிய நபர் அச்சுறுத்தினாராம். (இ-1)

# ஆலயங்களில்

பருத்தித்துறை, ஆக. 11

கார்த்திகைத் திருவிழாவான இன்று, புதன்கிழமை பொலிகண்டி கந்தவனத்தில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா சாரதா சேவாச்சிரம கிளை நகர சங்கீர்த்தன நிகழ்ச்சியை நடத்த உள்ளது.

சேவாச்சிரமக் கிளையில் காலையிலும், நண்பகலிலும் பஜனை நடைபெறும். அதனைத் தொடர்ந்து மாலை 5-30 மணிக்கு கந்தவனக் கடவை ஆலயத்தைச் சூழவுள்ள பகுதிகளில் நகர சங்கீர்த்தனம் நடைபெறும். கந்தவனப் பிள்ளையார் ஆலய பஜனைக் கோஷ்டியுடன் சுவாமி சித்ரூபானந்தாவும் நகர சங்கீர்த்தன நிகழ்ச்சியில் கலந்து கொள்வார். (ஆ)

o o o

ஏழாலை தெற்கு வசந்தபுரம் ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தான இலட்சார்ச்சனை கடந்த 23 ஆம் திகதி முதல் நடைபெற்று பூர்த்திப் பெருவிழா நாளை 12 ஆம் திகதி நடைபெறும்.

பூர்த்திப் பெருவிழாவில் விசேட நாதஸ்வர தவில் கச்சேரிகள், பண்ணிசை அரங்கு, பஜனை, காவடி, தெய்வீகப் பேருரை, அன்னதானம் என்பன இடம்பெறும். (க)

o o o

ஈச்சமோட்டை கட்டிப்புலம் அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம் அஷ்டோத்ர சகஸ்ர சங்காபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் நடைபெறும். (க)

# நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் இன்று புதன்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்:-

★ நாவலர் மணி மண்டப முன்றலில் தெய்வீக இசை அரங்கில் திரு. எம். பி. நாகேந்திரன் குழுவினரின் கெஞ்சிற் கச்சேரி மாலை 6 மணி முதல்.

★ நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஸ்ரீ முத்து விநாயகர் கோயிலில் 5-15 — 6-15 "கீதை சொன்ன கண்ணன்" எனும் பொருளில் கானகதாவாரிதி பிரம்ம ஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா மகாபாரத இசைச் சொற்பொழிவு

★ நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில்-

பிற்பகல் 2-3 மணி வரை "பிடியென்றொரு பாவி வெளிப்படினே" எனும்பொருளில் திரு. சிவ. மகாலிங்கம் சமயச் சொற்பொழிவு.

மாலை 5-30 — 6-30 மணி வரை பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி "கார்த்திகை உற்சவம் திருப்பெருவடிவம்" எனும் பொருளில் கந்தபுராண இசைப் பேருரை.

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக கச்சேரி - நல்லூர் வீதியிலுள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் பிற்பகல் 3-00 — 4-30 மணிக்கு கந்தபுராண படனம். (க-111-126)

# நல்லூரில் சுகாதார கண்காட்சி

யாழ்ப்பாணம், ஆக. 11

யாழ். மாநகராட்சி மன்ற சுகாதாரப் பிரிவும், வடமாகாணப் புற்றுநோய்ச் சங்கமும் இணைந்து நல்லூர் உற்சவ காலச் சுகாதாரக் கண்காட்சி ஒன்றை நடத்தி வருகின்றன.

சமகால சுகாதாரப் பிரச்சினைகள், புற்றுநோய், நோய் தடுப்பு பற்றிய விளக்கம், போசாக்கு பிரச்சினைகள், சித்த வைத்தியத்துறை சேவைகள், மூலிகைகளின் நன்மைகள் போன்ற மக்களுக்குப் பிரயோசனமான பல விடயங்கள் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. (இ-162)

# பல்கலைக்கழக மாணவருக்கு மண்எண்ணெய்

யாழ்ப்பாணம். ஆக. 11

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் தேவைக்காக மாதாந்தம் 50 பரல் மண்எண்ணெய்யை எடுத்துவர கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

அதேவேளை— மாணவர்களுக்குத் தேவையான காகிதாதிகள் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. (இ-3)

# சிங்கள பாதுகாப்பு சங்கத் தலைவர் ஜனாதிபதி விஜேதுங்கவுக்கு பாராட்டு

## இனப்பிரச்சினையை நன்கு புரிந்து கொண்டவராம்

கொழும்பு, ஆக. 11

நல்ல சிங்கள பௌத்தரான ஜனாதிபதி விஜேதுங்கா வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு எப்படி தீர்வு காண்பது என்பதை நன்கு புரிந்து கொண்டுள்ளார். இனப்பிரச்சினை குறித்த ஜனாதிபதியின் கருத்துகளை அறிந்து கொண்ட நான் அவருக்கு பாராட்டுச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளேன்.

சிங்கள பாதுகாப்புச் சங்கத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான காமினி ஜயசூரியா கொடகாவெல என்னும் இடத்தில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

"வடக்கு - கிழக்கு பிரச்சினைகுறித்து எமது சங்கம் கொடுத்த தகவல்களை அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசா கவனத்துக்கே எடுக்கவில்லை எல்லோரும் தொண்டமானுடன் தான் பிரச்சினை பற்றிப் பேசினார்கள் எம்மைப் பற்றி பாரதூரமாக கவனம் எடுப்பது இல்லை"— என்றும் அவர் சொன்னார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஸ்பங்கிளர், பாமாஸ், பாமாஸ் சுறுப்பு முட்டைகளும், சிக்கி — ஸ்பங்கிளர், பாமாஸ், பாமாஸ் சுறுப்புக் குஞ்சுகளும், தாய்க் கோழியுடன் உடன் விற்பனைக்கு உண்டு. பிளான்டீ பரவைடின், இல. 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (26878)

ஒன்றரை மாத பிறிமா பிறவுண் சேவல் குஞ்சுகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. இல. 1010/9, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (26895)

கைலைன் சிவப்பு, வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. திருமகள் ஸ்ரோர்ஸ், இல. 704, கே. கே. எஸ். வீதி, சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். (26883)

## மலிவு விற்பனை

ஆண்டு-5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் 6 8-93 முதல் 14-8-93 வரை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond கல்வி நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (6402)

## CLEARANCE SALE

இந்திய சஞ்சிகைகள், மலிவு விலையில் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர். (சி-5528)

## சைக்கிள் விற்பனைக்கு

புத்தம் புதிய (Asia Bike) ஏசியா சைக்கிள் விற்பனைக்கு உண்டு. பார்வையிட்டுப் பெற்றுக் கொள்ளலாம். து. சங்கர், இல. 958/8, கே. கே. எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (26891)

## ஆசிரியை தேவை

பாலர் பாடசாலைப் பயிற்சி பெற்ற அல்லது அனுபவம் உள்ள ஆசிரியை தேவை. கொக்குவில், கோண்டாவில், தாவடியை வதிவிடமாகக் கொண்டவர்கள் விரும்பத் தக்கது. விண்ணப்பங்களை கல்வித் தகைமைகளுடன் 23-8-93க்கு முன்னர் பொறுப்பாளர், மனோன்மணி பாலர் பாடசாலை, நந்தாவில் அம்மன் கோவிலடி, கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பவும். (26893)

## மிருதங்கம்

தோல் வாத்தியங்கள் முழு வேலைகளும் ஒரு கிழமைக்குள் நல்ல முறையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (2 892)

## புலமைப்பரிசில் [ ஆண்டு-5 ]

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை 12-8-93 வியாழன் முற்பகல் 6-00, 8-30, 11 00 மணி நேரங்களில் நடைபெறும். விடைத்தாள் 13-8-93 வெள்ளி வழங்கப்படும். எம்மால் வெளியிடப்பட்ட புலமைப்பரிசில் வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம் புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26882)

## வெளிவந்துவிட்டது

பிரார்த்தனை - மாலை (தோத்திரத்திரட்டு) ஆக்கம்: ஆத்மஜோதி முத்தையா. வெளியீடு: மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். கிடைக்குமிடம்: ஸ்ரீகாந்தா புத்தகசாலை நல்லூர், மக்மிலன் யாழ்ப்பாணத்திலும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. (சி-5659)

தோத்திரத்திரட்டு, கூட்டு வழிபாடு ரூபா 30/- (மலிவுப்பதிப்பு) அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை, நல்லை ஆதீனம், நல்லூர். (சி-5658)


## தவறிவிட்டது

கோண்டாவில் சந்திக்கும், நாவலர் வீதிக்கும் இடையில் 3 - 8 - 93இல் 498023339V இலக்க அடையாள அட்டையும், மண்மீட்பு நிதி பத்திரமும் கொழும்பு செல்வதற்கான அனுமதி அட்டையும் அடங்கிய காகித உறை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல. 211, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (26887)

## பால் விலை வீழ்ச்சி

கிளிநொச்சிப் பகுதியில் ஒரு லீற்றர் பசுப்பால் 5 ரூபாவாக விற்கப்படுகின்றது. இதனால் கிளிநொச்சியில் பால் தேநீர் விலை 3 ரூபாவாக குறைந்துள்ளது. (க-17)

# 31ஆம் நாள் அந்தியேட்டியும் நன்றி நவிலலும்



அமரர்

## வேலுப்பிள்ளை முருகையா

(உரிமையாளர், மாதுரி கிறைண்டிங்மில், இடைக்காடு)

மண்ணுலகம்: 25 — 10 — 1952
விண்ணுலகம்: 13 — 07 — 1993

சந்நிதியான் திருவருளால் தரணி வந்து பொன் கொழிக்கும் நெஞ்சினராய்ப் பொதுமை ஓங்க நன்மக்கள் தாம் உயர உழைத்த செம்மல் கண்மணி வே. முருகையா காதல்பொங்க புண்ணியத் தாய்புவனேஸ் வரியின்பாதத் தண்ணிழலில் தழைக்கின்றார்! சாந்தி சாந்தி!

எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த அன்பர்க்கும் எமது இதய பூர்வமான நன்றிகள்.

நாளை (12-08-1993) வியாழக்கிழமை காலை 9-00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டி ஆத்ம சாந்திப்பிரார்த்தனை, மதிய போசனம் ஆகியவற்றில் கலந்து கொள்ளுமாறு பேரன்புடன் வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
சகோதரர், மருமக்கள்.

இராசவீதி,
அச்சுவேலி.

(26896)

# சமய அறிவுப் போட்டி

நல்லூர் சந்தன் மஹோத்சவத்தை முன்னிட்டு தமிழ் மாமன்றம் வருடாந்தம் நடத்தும் சமய அறிவுப் போட்டியின் எழுத்துப் பரீட்சைப் போட்டி 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு நல்லை ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறும், வினாப் பத்திரங்கள் நல்லை ஆதீனபாலாஜி புத்தக சாலையில் விற்பனையாகின்றன. இப்போட்டியில் தங்க, வெள்ளி, வெண்கல பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. இதற்கான பரிசளிப்பு விழா 19ஆம் திகதி மாலை 5 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறும். (எ)

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

## O/L

ஆண்டு 10, 9 மீட்டல்

| | |
|---|---|
| கணிதம் | — சதீஸ் |
| விஞ்ஞானம் | — தயாநிதி |
| சமூகக்கல்வி | — ஜியூபேப் |
| தமிழ் | — பிரதீபன் |
| ஆங்கிலம் | — ஸ்ரீதரன் |
| வர்த்தகம் | — ஸ்ரீ |

10 - 8 - 93இல் ஆரம்பமாகிவிட்டன.
காலை 8 மணி.

(சி-5657)

# NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்.

## 94 A/L

துரித மீட்டல் வினா-விடை வகுப்புக்கள்

தூய, பிரயோக கணிதம்

திரு. குணசிங்கம் B. Sc.

ஆரம்பம்:
14 - 08 - 1993
சனிக்கிழமை
பிற்பகல் 4-00 மணி
(சனி, ஞாயிறு 4-00—6-00

(சி-5660)

# தேவை

## மருந்து விற்பனையாளர் (பயிலுனர்)

தகுதி: ஜி. சி. ஈ (சாதாரண தர) பரீட்சையில் ஒரே தடவையில் ஐந்து பாடங்களில் திறமைச் சித்தி. ஆங்கில பாடத்தில் சித்தி அவசியம்.

வயது: 20 வயதிற்கு உட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

முகாமையாளர்:
மருந்து, பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
இல. 484, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(26884)

# தேவை

## வில்லியம் ஹாவே தனியார் மருத்துவமனை

சுண்டிக்குளி.

மேற்படி மருத்துவமனைக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ டாக்டர்
1. முழுநேர வேலைக்கென M. B. B. S. தரத்தில் உள்ளவர்.
2. பகுதி நேர வேலைக்கென M. B. B. S. தரத்தில் உள்ளவர்.

★ தாதி
சத்திர சிகிச்சை கூடத்தில் அனுபவம் பெற்ற பெண் தாதி.
(மேற்படி பதவிகளுக்கு ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்)

● வடமராட்சி தெற்குப் பகுதியிலிருந்தும் விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
நிர்வாகத்தினர்,
வி. ஹா. த. ம. மனை,
C/o டாக்டர் எஸ். பி. நடராஜன்,
இல. 17, சண்டி வீதி, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

— நிர்வாகத்தினர்.

(26885)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்:

### அரசியல் விளையாட்டே!

ஜனாதிபதி விஜேதுங்கா தலைமையிலான அரசாங்கம் உடனடியாக ராஜினாமாச் செய்ய வேண்டும் என வற்புறுத்தி எதிர்க்கட்சிகள் நாளை கொழும்பில் [நுகேகொடையில்] ஆர்ப்பாட்டப் பேரணியையும் கூட்டத்தையும் நடத்த உள்ளன.

சரியாக நாற்பது வருடங்களுக்கு முன்னர், ஆகஸ்ட் பன்னிரண்டாம் திகதி நடைபெற்ற அரசுக்கு எதிரான ஹர்த்தாலை நினைவு கூரும் வகையில், அதனுடன் பொருந்தக் கூடியதாக நாளைய ஆர்ப்பாட்டப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

1953இல் ஒரு கொத்து அரிசியின் விலையை 25 சதத்திலிருந்து 75 சதமாக உயர்த்தியதையும், மாணவருக்கு வழங்கப்பட்ட மதிய உணவு (பனிஸ்) நிறுத்தப்பட்டதையும் ஆட்சேபித்தே ஹர்த்தால் நடத்தப்பட்டது.

ஹர்த்தாலை முறியடிக்க அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசு இராணுவ பலத்தைப் பயன்படுத்தியது. கலகம் அடக்கும் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. அதனை மீறி வீதிகளில் நடமாடினார்கள் என்று 12 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஆயிரக் கணக்கானோர் சிறைகளில் அடைக்கப்பட்டனர். நண்பகல் 12 மணியுடன் ஹர்த்தால் ஓய்ந்து போனாலும் அதன் விளைவு மக்களுக்குப் பெரும் பயன் தந்தது.

பங்கீட்டு அரிசியின் விலை 75 சதத்தில் இருந்து முதலில் 55 சதமாகவும் பின்னர் 25 சதமாகவும் குறைக்கப்பட்டது.

அப்போதைய ஐ. தே. க. அரசை அரிசி அரசியல் நிலைகுலுங்க வைத்தது. பொருளாதாரப் பிரச்சினையில் கவனம் செலுத்தத் தூண்டியது. அன்றைய நிலையைவிட இன்றைய பொருளாதார நெருக்கடி நானூறு மடங்கு அதிகமாகி உள்ளது உண்மை தான்.

பொருளாதார நெருக்கடி கழுத்தை வளைத்துப் பிடிப்பதற்கு முக்கிய காரணியாக விளங்கும் யுத்தத்தை அரசு தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது. அதனை நிறுத்துவது பற்றியோ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்தோ எவ்வித அக்கறையும் கொள்ளாதிருக்கிறது.

மறுபுறத்தில், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றிடம் சரணாகதி அடைந்து, அவை விதிக்கும் நிபந்தனைகளை சிரசின் மேல் ஏற்று தெற்கு மக்களின் பல சமூக நலத்திட்டங்களை நீக்கிவிட முனைந்திருக்கிறது.

வெளிநாட்டுக் கடன் பெற்றால்தான் போரைத் தொடரலாம். உலக வங்கி, ச. நா. நிதியம் ஆகியவற்றிடம் சரணாகதி அடையாமல், மண்டியிடாமல் வெளிநாட்டுக் கடன் பெற முடியாது. வாங்கும் கடனைச் சுமக்கப் போகிறவர்கள் மக்கள். ஆட்சியில் உள்ளவர்களுக்கு அதனைப் பற்றி ஏது கவலை!

எதிரணியினருக்கு இது விளங்காதது அல்ல. தமிழர்களுக்கு எதிராக யுத்தம் நடத்தி அவர்களை அடிமை கொள்ள வேண்டும் என்பதில் அரசுக்கும் எதிரணிக்கும் எவ்வித கருத்துவேற்றுமையோ முரண்பாடோ இல்லை.

அதனாலேயே வாழ்க்கைச் செலவு உயர்வுக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் யுத்தமே பெரும் காரணி என்பதை மக்களுக்குச் சொல்ல விரும்பாமல் உலக வங்கி, ச. நா. நிதியம் ஆகியவற்றின் ஆதிக்க நிலையை முன்னெடுத்துக் காட்டுகின்றன.

உண்மையில், யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள்; இல்லையேல் ராஜினாமாச் செய்யுங்கள்— என்றுதான் ஹர்த்தால் நடத்த வேண்டும். ஆனால் ...! அது நடக்காது!! எல்லாமே ஏமாற்று அரசியல் விளையாட்டுத் தான்...!

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஆக. 11

இரசாயனவியல் ஆசிரியர் சங்கத்தினர் ஏற்பாடு செய்துள்ள — உயர்தர வகுப்புகளில் இரசாயனவியல் கற்பிக்கும் — ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

கலந்துரையாடலில் அண்மையில் நடந்து முடிந்த ஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையின் இரசாயனவியல் வினாத்தாள்கள் பற்றிய கருத்துப் பரிவர்த்தனை இடம்பெறும். (த)

## வெளிநாட்டுக்கு ஹேமா செல்வார்

கொழும்பு, ஆக. 11

திருமதி ஹேமா பிரேமதாஸா வெளிநாட்டுப் பயணம் ஒன்றை இம்மாத இறுதியில் மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

# இந்திய வெளியுறவு அமைச்சருடன் வரதராஜப்பெருமான் குழு பேச்சு

கொழும்பு, ஆக. 11

வடக்கு—கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் கடந்த மாதம் புதுடில்லியில் இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஷ்சிங், இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜே. என். டிக்ஸிற் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

''சண்டே ஐலண்ட்'' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா படுகொலையுண்ட பின்னர் இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றம் மற்றும் கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு ஆகியன பற்றி ஈ.பி.ஆர்.எல்.எவ் வின் எம். பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் வல். கேதீஸ்வரன் ஆகியோர் இந்தியா சென்று அங்கு தலைமறைவு வாழ்க்கை மேற்கொண்டுள்ள வரதராஜப்பெருமாளைச் சந்தித்துப் பேசினார்கள்.

பின்னர் திரு. வரதராஜப்பெருமாளின் வேண்டுகோளுக்கு இணங்க, அவரை இக்குழுவினர் புதுடில்லிக்கு அழைத்து வந்து வெளியுறவு அமைச்சர் தினேஷ்சிங், செயலாளர் டிக்ஸிற் ஆகியோரை சந்தித்தனர்.

அச்சந்திப்பின் போது இலங்கையில் அரசியல் மற்றும் இராணுவ நிலவரம் பற்றி நீண்ட நேரமாக ஆராயப்பட்டது.

இலங்கை நிலவரத்தின் தற்போதைய சூழ்நிலையில், இந்தியா கடைப்பிடிக்க வேண்டிய கொள்கை என்ன என்பது பற்றியும் தினேஷ்சிங், டிக்ஸிற் மற்றும் பெருமாள் ஆகியோர் ஆராய்ந்தனர்.

திரு பிரேமச்சந்திரன், திரு. கேதீஸ்வரன் ஊடாக ''சண்டே ஐலண்ட்'' வார இதழ் திரு. வரதராஜப்பெருமாளைப் பேட்டி கண்டது.

''விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் புதுடில்லியின் உதவியை கொழும்பு நாடியுள்ளதாக அண்மைக் காலத்தில் செய்திகள் வெளியாகியுள்ள இந்த வேளையில், உங்களினதும் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பினதும் பங்கும் எவ்வாறாக இருக்கும்?''—என்ற கேள்விக்கு பதிலளித்த திரு. வரதராஜப்பெருமாள்—

''புதுடில்லியின் உதவியை கொழும்பு நாடியுள்ளதாகவும் இந்திய அமைதிப் படை மீண்டும் செல்லும் என்றும் வெளியான செய்திகளை நானும் பத்திரிகைகளில் வாசித்தேன். எனது அபிப்பிராயத்தின் படி இச் செய்திகளில் பெரும்பாலானவை வெறும் ஊகங்களின் அடிப்படையில் எழுந்தவையாகும்.

''அண்மைக் காலத்தில், கொழும்பு கேட்டால் கூட இந்தியத் துருப்புகளை புதுடில்லி அனுப்புவதான அறிகுறிகள் எதனையும் நான் காணவில்லை''—என்று தெரிவித்தார்.

''எனது தனிப்பட்ட பாதுகாப்புக்கு உத்தரவாதமும் நீண்ட யுத்தத்துக்கு ஒரு தீர்வாக தமிழ்ச் சமூகத்திற்கு அரசியல் திட்டம் ஒன்று முன் வைக்கப்பட்டாலுமே நான் இலங்கைக்கு திரும்புவேன்''—என்றும் அவர் சொன்னார். (உ-எ)

# தெற்கு பல்கலைக் கழகங்களில் மீண்டும் ஜே.வி.பி. தலைதூக்குகிறது!

தெற்கு பகுதிகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் ஜே.வி.பி. மீண்டும் தலைதூக்கும் அறிகுறிகள் தென்படுவதாகச் சொல்லப்படுகின்றது.

பல்கலைக் கழகங்களில் தற்போது நிலவும் அமைதியின்மை எதிர்ப்பு பிரசாரங்களும் 1980 நடுப்பகுதியில் ஜே. வி. பியின் நடவடிக்கைகள் இருந்த போது இடம்பெற்றவை போன்று காணப்படுவதாக பல்கலைக் கழக நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்து வரும் அனுபவசாலிகள் கூறுவதாக ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

தங்களின் சொந்த நலன் கருதி மாணவர்களைப் பயன்படுத்தும் சில பேராசிரியர்களின் நடவடிக்கைகளினால் கொழும்பு பல்கலைக் கழகத்தில் ஜே.வி.பி கால அமைதியின்மை சில காலமாக நிலவி வருகின்றது என்றும் —

இந்த நிலை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் தற்போது தலைகாட்டத் தொடங்கி உள்ளது என்றும் சொல்லப்படுகிறது.

விரைவில் 1980 களில் நிலவிய பயங்கர நிலை ஏற்படலாம் என்றும் அவதானிகள் கூறுகின்றனர்.

பலமான தலைமைத்துவத்தை வழங்கிய முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா இல்லாமையே இதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று என தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

# இரண்டாவது தொகுதி வினாத்தாள் வந்தது

தற்சமயம் நடைபெறும் ஜி. சீ. ஈ (உயர்தர) பரீட்சையின் இரண்டாவது தொகுதி வினாத்தாள்களும் — 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள்களும் — நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

திருகோணமலையில் இருந்து 'நரோமா' கப்பல் மூலம் அவை காங்கேசன்துறைக்கு எடுத்து வரப்பட்டு, அங்கிருந்து குமாரி கப்பல் மூலம் வருத்தித்துறைக்கு . நேற்றுக் காலைகொண்டு வரப்பட்டன.

எதிர்வரும் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள பிரயோக கணிதம் பாடத்துக்கான விசேட பரீட்சைக்கான விசேட வினாத்தாள்களும் நேற்றுவந்து சேர்ந்தன.

இதே வேளை —

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அனுமதி அட்டைகளை பாடசாலை அதிபர்கள் நாளை வியாழக்கிழமை அந்தந்தப் பகுதி கோட்ட அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளுமாறு யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார். (உ-3-5-9-162)

## கொழும்பு செல்லும் நோயாளருக்கு

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்கென வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்கள் கப்பலில் செல்வதற்கு பதிவு செய்ய எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். போதனா வைத்திய சாலை காரியாலயத்தில், தகுந்த ஆவணங்களுடன் சமுகமளிக்கும்படி வைத்திய சாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (த-15)

# யாழ். மாநகர பிரிவுக்கு 50 சுகாதாரத் தொண்டர்கள்

யாழ்ப்பாணம், ஆக. 11

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் கடைமையாற்ற கிராம சுகாதார தொண்டர்களாக 50 பேர் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினர் யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதியினருடன் இணைந்து இந்த நியமனங்களை வழங்கவிருப்பதாக தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் வட - கிழக்கு மாகாண பொறுப்பாளர் திரு. ம. சிவயோகசுந்தரம் தெரிவித்தார்.

இந்த நியமனங்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் விரைவில் நடைபெறவிருக்கின்றன.

## இன்று

யாழ். மாநகரசபையின் சித்த மருத்துவப் பிரிவினால் நடத்தப்படும் மூலிகைக் கண்காட்சி நல்லூர் சிவன் கோவிலுக்கு முன்பாக உள்ள இல்லத்தில் இன்று புதன் காலை 8-30 மணிக்கு யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கத்தினால் திறந்து வைக்கப்படும். (த)



## கார்த்திகைப் பெருவிழா

இராகம்: ஆபோகி தாளம்: ஆதி

பல்லவி

கார்த்திகை தோறும் பெருவிழா - பக்தர்
கண்டு களிக்குந் திருவிழா (கார்த்)

அனுபல்லவி

கீர்த்தி மேவும் நல்லை மேய - கார்த்தி
கேயன் உலாவரும் நேரிலே (கார்த்)

சரணம்

சரவணப் பொய்கை தவழ்ந்த பிள்ளை
தத்துவம் தந்தைக் குரைத்த பிள்ளை
பிரமனைச் சிறையில் இட்ட பிள்ளை - அவ்வை
பிராட்டிக் கருளிய சின்னப் பிள்ளை (கார்த்)

- சேந்தன்.

**விவசாய மண்ணை பண்படுத்தி எருவிடுவோம்**
**பச்சை இலையும் தாட்டு மண்ணைக் காத்திடுவோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னையா பாக்கியம்

காலையடி பண்டத்தரிப்பைச் சேர்ந்த பொன்னையா பாக்கியம் நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகமுத்து - சோதிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற சின்னப்பு பொன்னையாவின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம் (லண்டன் - முன்னாள் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர்), திருச்செல்வம் (தொழிலதிபர் — லண்டன்), ச. இராசேஸ்வரி, காலஞ்சென்றவர்களான ஜெயச்சந்திரன், சந்திராதேவி ஆகியோரின், அன்புத் தாயாரும், பொ. யோகேஸ்வரி (இந்தியா), ச. சண்முகலிங்கம் (அதிபர், ஆறுமுக வித்தியாலயம், சுழிபுரம்), தி. எஸ்தர் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், நிர்மலன், புலேந்திரன், வனஜா, கிரிஜா, வசந்தி, ஜெயந்தி, முரளி, இராஜினி (யாழ். பல்கலைக்கழகம்), யாழினி, இராகுலன், போல், ஆஷா, டெனிஸ், ஷரன் ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
ச. சண்முகலிங்கம்
(மருமகன்)

காலையடி,
பண்டத்தரிப்பு.
(26904)

## திருமதி சுப்பிரமணியம் இராசம்மா

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், தற்போது இல. 68/2, இராசாவின் தோட்ட முன்லேனில் வசித்தவருமான திருமதி சுப்பிரமணியம் இராசம்மா நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சச்சிதானந்தன் (கொழும்பு), திருமதி பேரம்பலநாதன் தனலெட்சுமி, சோதிட சிந்தாமணி விவேகானந்தன் (கொழும்பு), சண்முகானந்தன் (ஜேர்மனி), நித்தியானந்தன் (நியூ கல்யாணி ஜுவலர்ஸ்), கமலானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும்—

காலஞ்சென்ற பேரம்பலநாதன், சகுந்தலாதேவி, நிர்மலாதேவி, அருந்தவதேவி பங்கையற்செல்வி, ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சரவணமுத்து (மலேசியா), கந்தையா மாஸ்ரர் (கனடா), காலஞ்சென்ற கார்த்திகேசு (உதயா ரேடியோ கொம்பனி கொழும்பு), ஈழநாடு வாரமலர், முன்னாள் ஆசிரியர் சபாரத்தினம் (லண்டன்), சிவக்கொழுந்து, விசாலாட்சி, கமலாட்சி, கனகம்மா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு இவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சு. நித்தியானந்தன்
(நித்திமாமா) [மகன்]
உரிமையாளர்: நியூ கல்யாணி ஜுவல்லர்ஸ்
யாழ்ப்பாணம்

68/2, இராசாவின் தோட்ட முன்லேன்,
யாழ்ப்பாணம்.
(26903)

## தம்பாபிள்ளை முருகவேல்

(வைத்திய கலாநிதி மண்டூர்)

வேலணையை பிறப்பிடமாகவும் சுருவிலை வதிவிடமாக கொண்டவரும் மண்டூரில் கடமையாற்றியவருமான தம்பாபிள்ளை முருகவேல் காலமாகிவிட்டார். இவர் சரோஜாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பாபிள்ளை தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், பாரதி (கனடா), பார்த்திபன் (கனடா), கஸ்தூரி, பிரியா, இவர்களின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற துரைராஜா, ஜானகி (சுருவில்) ஆகியோரின் மருமகனும், சக்தி, பவதநாயகம், வெண்தாமரை, ஸ்ரீரங்கன், கீதப்பிரியன், ஆகியோரின் சகோதரரும், தவநாயகம், சகுந்தலா, ஈஸ்வரன், தவமலர், உதயகுமாரி, இவர்களின் மைத்துனரும், ம. க சுப்பிரமணியம் (நொத்தாரிசு), நடராஜா, நல்லையா இவர்களின் மருமகனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. தவநாயகம், த. ஈஸ்வரன்

நம். 37, செட்டித்தெரு,
நல்லூர்.
(26901)

### அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட

# ஈழ அகதிகளை சுவிஸ் அரசு டிசம்பரில் திருப்பி அனுப்பும்

பொன், ஆக. 11

அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட — இலங்கைத் தமிழ் அகதிகளை — சுவிஸ் அரசு இவ்வருடம் டிசம்பர் மாத முடிவிற்குள் திருப்பி அனுப்பும்.

சுவிஸ் அரசின் அகதிகள் திணைக்கள அதிகாரி திரு. டெக்கர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அகதிகளை அவர்களின் தாயகத்துக்கு அனுப்பி வைப்பது குறித்து கொழும்பில் அரசு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி விட்டு சுவிஸ் திரும்பிய திரு. டெக்கர் அங்கு செய்தியாளருக்குப் பேட்டியளித்தார்.

திருப்பி அனுப்பப்படும் அகதிகளின் பாதுகாப்புக்கு இலங்கை அரசு உத்தரவாதமளித்துள்ளது. அதனை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் மேற்பார்வை செய்யும். அகதிகளை திருப்பி அனுப்பும் செலவை சுவிஸ் அரசு பொறுப்பேற்கும்.

இலங்கையில் வடக்கில் பாதுகாப்பற்ற நிலை நீடிக்கின்றது. தெற்குப் பகுதியில் ஏராளமான தமிழர்கள் வசித்து வருகின்றார்கள். அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட தமிழர்களே இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவர்.

எவ்வளவு அகதிகளை திருப்பி ஏற்பது என்பது பற்றி இலங்கை அரசு முடிவு செய்யவில்லை. சுவிட்சர்லாந்துக்கு அகதிகள் அந்தஸ்து கோரி புதிதாக வருபவர்களின் விண்ணப்பங்கள் இரு வாரங்களில் பரிசீலனை செய்யப்பட்டு முடிவு எடுக்கப்படும் — என்றும் திரு. டெக்கர் கூறினார்.

(உ-எ)

### விரைவில் இரு கட்சிகள் இணைப்பு:

# காமினிக்கு நிதி அமைச்சர் பதவி; பிரேமச்சந்திராவுக்கு வர்த்தகத்துறை

கொழும்பு, ஆக. 11

ஐக்கிய தேசியக் கட்சி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இணைப்பு ஏற்படும் பட்சத்தில் காமினி திஸநாயக்காவுக்கு நிதி அமைச்சர் பதவியும் ஜி. எம். பிரேமச்சந்திராவுக்கு வர்த்தகம் மற்றும் வாணிபத்துறை அமைச்சுப் பதவியும் வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் —

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் உள்ள சில எம். பிக்களை இராஜினாமாச் செய்ய வைத்து அவ்விடங்களுக்கு காமினி திஸநாயக்கா, ஜி எம். பிரேமச்சந்திரா, சமரவீர வீரவன்னி, லஷ்மன் செனவிரத்ன, எஸ் ஏ. முத்துபண்டா, பிரேமரத்னா குணசேகரா ஆகியோர் எம். பிக்களாக நியமிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இரு கட்சிகளும் இணைவது பற்றிய சகல நடவடிக்கைகளும் அடுத்த வாரம் பூர்த்தியாகிவிடும் என்றும் —

இணைப்பு பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு அடுத்த மாதம் முற்பகுதியில் வெளியிடப்படலாம் என்றும் உயர்நிலை வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே ஐலண்ட்" செய்தி வெளியிட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் தமது கட்சி ஒத்துழைப்பு வழங்க முன்வந்ததற்குரிய காரணங்கள் அடுத்த வாரம் அறிக்கை ஒன்றின் மூலம் வெளியிடப்படும் என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் ஜி எம். பிரேமச்சந்திரா தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் —

இரு கட்சிகளும் இணைவதை அடுத்து அமைச்சரவை மாற்றம் விரைவில் நிகழும் என மற்றொரு செய்தி தெரிவித்தது.

தற்சமயம் இராஜாங்க அமைச்சராக இருக்கும் ஒருவர் தமது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு கனடாவுக்கான இலங்கைத் தூதராகச் செல்லவிருப்பதாகவும் —

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்தோர் அரசு தரப்பு எம். பிக்களாவதற்கு வசதியாக தமது பதவிகளை இராஜினாமாச் செய்யவிருப்பதாக நம்பப்படும் இரண்டு ஐ. தே. க. தேசிய பட்டியல் எம். பிக்களை பிரிட்டன், மற்றும் அவுஸ்திரேலிய தூதர்களாக நியமிக்க அரசாங்கம் கொள்கை அளவில் இணங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ-3)

## 'வாதுவ' திரும்பியது

யாழ்ப்பாணம், ஆக. 11

பருத்தித்துறையில் பொருள்களை இறக்கும் வேலைகளை முடித்துக் கொண்டு 'வாதுவ' கப்பல் நேற்று அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது.

ஆயிரம் பரல் மண்எண்ணை மற்றும் தீப்பெட்டி, அப்பியாசக் கொப்பிகள் என்பவற்றுடன் வந்த 'ஐலண்ட் பிறைற்' கப்பல் அவற்றை இறக்கி விட்டு இன்று பருத்தித்துறையிலிருந்து புறப்படவுள்ளது.

(உ-173)

## அப்பியாச புத்தகங்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஆக. 11

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்கள் கல்வித் திணைக்களத்தால் விநியோகம் செய்யப்படுவதாகவும் —

பாடசாலை அதிபர்கள் தங்கள் மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்களுக்கு உரிய பணத்தை கல்வித் திணைக்களத்தில் நேரடியாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

## காமினிக்கு அமைச்சர் பதவி ஒரு மரணப் பொறியாம்!

கொழும்பு, ஆக. 11

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பதவியை திரு. காமினி திஸநாயக்கா ஏற்றுக்கொள்ளமாட்டார் என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்து வருகின்றது. இந்த நிலையில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பதவி ஒரு மரணப் பொறி என்றே நாம் எண்ணுகின்றோம். — இவ்வாறு அப்பேச்சாளர் மேலும் கூறியதாக "சண்டே ஐலண்ட்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

### மணலாறு தாக்குதல்:

# எதிர்க் கட்சியினருக்கு ஹமில்டன் விளக்கம்

கூட்டுப்படைகள் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா கடந்த வியாழக்கிழமை எதிர்க் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து, மணலாறு மண்கிண்டிமலை (ஜனகபுர) இராணுவ முகாம் வீழ்ச்சி பற்றிய விவரங்களை எடுத்துக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன, ஈ. பி. ஆர். எல். எவ். செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், சுதந்திரக் கட்சி எம். பியான அனுருத்த ரத்வத்தை ஆகியோரையே ஜெனரல் வணசிங்கா சந்தித்திருந்தார்.

(உ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 393/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11-08 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org